1990 மே 8]

மேம்பாலம்

* *3178* திரு. ஏ. கோதண்டம் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்றத்தூர்—அனகாபுத்தூரை இணைக்கும் தரை பாலத்தை மேம்பாலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முதல் துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப் பணி மத்திய அரசு 1989–90 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பால வேலை சென்னை புறவழிச் சாலைக்காக நில ஆர்ஜிதம் மற்றும் சாலை மதிப்பீடுகள் மத்திய அரசு ஒப்புதல் பெற்று செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தரைப் பாலம் தடுத்து விட்டதனால் உறுப்பினர் வரவில்லை.

அனல் மின் நிலையம்

* *3250* திரு. ஆ. பாலையா : திரு. துரை சந்திரசேகரன்:
மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பார்த்தே அமைச்சர் விடை சொல்லலாம். உறுப்பினர் பின்னாலே தான் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : குமரிக்கான திட்டம் பற்றி திரு. துரை சந்திரசேகரன் எவ்வாறு கேள்வி போட்டார் என்று பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அக்கறைதான்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அக்கறைதான். 'ரைட்'. தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள இராஜாக்க மங்கலம் என்ற இடத்தில் ஒரு மின் நிலையம் அமைக்க ஆய்வு செய்யப்பட்டது. கீழ்க்கண்ட காரணங்களினால் அவ்விடத் திலே அனல் மின் நிலையம் அமைக்க ஏதுவாக இல்லையென்று ஆய்வு தெரிவிக்கிறது. தேவையான நிலம் கிடைக்கவில்லை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கருத்துப்படி, இந்த அனல் மின் நிலையத்தை அமைக்கத் தேர்வு செய்யப் பட்ட இடம் கடற்கரையிலிருந்து 500 மீட்டருக்குள் இருக்கிறது கடற்கரையில் 500 மீட்டருக்குள் கட்டடங்கள் கட்டுவது சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாகத் தடை செய்யப் பட்டிருப்பதால் அதை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. இதன்னியில் வேறு ஏதாவது இடங்கள் கிடைத்தால் இந்த அனல் மின் நிலையத்தை அமைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-25 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் பற்றாக்குறை என்பது மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்து கொண் டிருக்கிறது. இராஜாக்கமங்கலம் பகுதியில் ஒரு அனல் மின் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லாத நிலைமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேறு பகுதியில் பொருத்தமான இடம் கிடைப்பதற்கும், வாய்ப்பு இருப்பதன் காரணத்தால் அந்த இடத்தைத் தெரிவு செய்து அமைச்சரிடம் தெரியப்படுத்தினால் கட்டாயமாக அங்கே ஒரு அனல் மின் நிலையம் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தினுடைய இலக்கணத்திற்கு உட் பட்டு அந்த இடம் இருந்தால் நிச்சயம் மின் வாரியம் அந்த மின் நிலையத்தைத் துவக்க முன்வரும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS